செ.வெ.எண்:388/2009(செமதொஅ) நாள். 10.11.2009

# ஏரி, குளங்களின் கரையை உடைக்கும் சமூக விரோதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப அவர்கள் எச்சரிக்கை

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்த மழையால் ஏரிகள், குளங்கள் நீர்ஆதாரங்கள் மழை நீரால் நிரம்பி வருகின்றன. அந்த நீர்ஆதாரங்களின் கரைகளை சில சமூக விரோதிகள் உடைத்து விடுகிறார்கள். இதனால், வெள்ளச் சேதம் ஏற்படுவதுடன் குடிநீர் வீணாகிறது. அத்தகைய சமூக விரோத செயல்களில் ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் எச்சரித்துள்ளார்.

மழையால் ஆங்காங்கே உள்ள பள்ளங்களில் தண்ணீர் தேங்கி உள்ளது. அந்த இடங்களில் கொசு மற்றும் நோய் கிருமிகள் பரவுகின்றன. எனவே, உள்ளாட்சி அமைப்புகள் பள்ளங்களில் நீர் தேங்காத வண்ணம் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், நீர் தேங்கியுள்ள பகுதிகளில் கிருமி நாசினிகளை தெளிக்க வேண்டும். தொற்று நோயிகள் ஏதாவது தென்பட்டால் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்கு பொதுமக்கள் செல்ல வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

குடிநீர் ஆதாரங்களில் வைரஸ் போன்ற தொற்று நோய் கிருமிகள் பரவ வாய்ப்புள்ளதல் குடிநீரை காய்ச்சி பருகுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்